மேகநாதம்

66
4-56
OFFICE OF THE REGISTRAR OF BOOKS
8 OCT 1956
MADRAS
2 - APR 1958

கம்பராமன்

NN2/C

நம்பெருமாள் மன்றம்
வரகூர்.

ஓம்

மேகநாதம்

*

ஆக்கியோன்

S. K. இராமராசன்

'கம்பராமன்'

*

நம்பெருமாள் மன்றம்

வரகூர்.

நாமக்கல் வட்டம் —○— சேலம் மாவட்டம்.

முதற்பதிப்பு: சுதந்திரத் திருநாள் 1956,

விலை ஒரு ரூபாய்

கருணாநிதி மின்சக்தி அச்சகம், வேலூர் (சேலம்).

ஓம்

திருவழுந்தூர் வரு தேசிக! போற்றி!

வணக்கம்.

இலங்கையம்பதியை வீரமாநகர் ஆக்கியவன் மேகநாதன். இவன் இராவணனுடைய புதல்வன். இந்திரனையே புறம் கண்டவன். அதனால் "இந்திரஜித்தன்" என்ற விருது பெற்றவன். இவ்வீரமகனைப்பற்றிக் கூறுவதே "மேகநாதம்" என்னும் இந்நூல்.

கவிராஜபண்டிதர் ஜெகவீரபாண்டியனார் வீரபாண்டியனைப் பற்றிப் பாடிய – தேனினுமினிய தீஞ்சுவை சான்ற – பாரகாவியம் வீரபாண்டியம் எனப் பெயர்பெற்றாற்போல-இந்நூல் மேகநாதனைப் பற்றிக் கூறுவதால் – 'மேகநாதம்' எனப்பெயர் பெற்றது.

இந்நூல் நான்கு இலம்பகங்களாகப் பகுக்கப்பட்டுள்ளது. இக்காப்பியத் தலைவர்கள் மேகநாதனும், சுலோசனையும், ஆவார்கள்.

யான் இந்நூலைப் பத்து ஆண்டுகட்கு முன்பு பாடிமுடித்தேன். இதுவரையிலும் யோக நித்திரையில் இருந்தது. இப்போதுதான் பூபாள ராகம் பாடுகிறேன் உறங்கும் பெருமாள் உலாவும் பெருமாள் ஆகிச் சேவை தருகிறது.

இந்நூல் 22—8—54 ஆம் தேதி கருவூர் பொது சமய சன்மார்க்க சபையில் அரங்கேற்றப்பட்டது அன்பர்கள் பாராட்டினர். ஊக்கம் தந்தனர். அப்போதுதான் இந்நூலை வெளியிட வேண்டும் என்னும் ஆர்வம் எனக்கு உண்டாயிற்று. சங்கத்தார் அன்பை என்றும் மறவேன்.

இந்நூலுக்கு அணிந்துரை வழங்கவேண்டும் என்று அண்ணன் திரு. சா. கணேசன் அவர்களிடம் வேண்டிக் கொண்டேன். அன்போடு தருவதாக வாக்களித்தனர். பரிவோடு தந்தனர். அவர்கள் என்பால் கொண்ட பெருங்கருணைக்கு யான் என்றும் கடமைப்பட்டுள்ளேன்.

மயிலைத் தொல்காப்பியர் — பன்மொழிப்புலவர் — திரு. *V.* வேங்கடராஜுலு ரெட்டியார் அவர்கள் திருவடியில் இந்நூலைப் பணிவுடன் சமர்ப்பணம் செய்கிறேன். அவர்கள் என்பால் கொண்ட பேரருட்கு அறிகுறியாக இந்நூல் நின்று நிலாவ வேண்டும் என்பது என் விருப்பம்.

இவ்வெளியீட்டால் வரும் ஊதியம் வரகூர் உயர்நிலைப்பள்ளிக் கட்டிட நிதிக்கு உரியது. ஆதலால் அன்பர்கள் "விலை அதிகம்" எனக் கூறமாட்டார்கள் என்று நம்புகிறேன்.

இந்நூலை அழகுற அச்சியற்றித் தந்த கருணாநிதி மின்சக்தி அச்சக அதிபர் திரு. *T. K.* குமரேசன் அவர்கட்கு என் அன்பு உரித்தாகுக.

இந்நூலை ஆதரித்து ஊக்கம் தருமாறு அன்பர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

வாழிய! செந்தமிழ்!

கம்ப நிலையம்,
வேலூர் (சேலம்)
சுதந்திரத்திருநாள் 1956.

இங்ஙனம்,
S. K. இராமராசன்,
"கம்பராமன்"

அணிந்துரை.

நண்பர் எஸ். கே. இராமராசன் அவர்கள் கம்பன் புகழ் பாடிக் கன்னித்தமிழ் வளர்க்கும் அன்பர் திருக்கூட்டத்தில் ஒருவர். தமிழ் மொழியிடத்து ஆராக்காதல் பூண்டொழுகுபவர். இலக்கண இலக்கியங்களை முறையாகப் பயின்ற கல்வியாளர். கல்வியின் பயனுய நல்லொழுக்கமும் தெய்வ சிந்தனையும் நிரம்பியவர். நன்றே நினைந்து குணமே மொழியும் நற்செயலாளர். நோக்கம் மட்டுமின்றிப்போக்கும் சிறப்புற்ற பண்பாளர். பண்டைப் பெருமக்களின் நன்னூல்களைப் பக்தி சிரத்தையுடன் ஓதி இன்புறுபவர். முன்னையோர் கண்ட முறைக்கு முரண்படாவாறு பின்னையோர் வேண்டும் புதுமைகளைத் தழுவி நிற்கும் சால்பினர். பன்னூற் பயிற்சியும் செய்யுள் இயற்றும் ஆற்றலும் உடையவர். கவியரங்கம் பலவற்றில் பங்குகொண்டு பாராட்டுப் பெற்றவர். சிறு பிரபந்தங்களாகவும் இவர் கவிதை உருப்பெற்றிருக்கின்றன.

இத்தகைய நற்பண்புகளால் எல்லோருடைய அன்புக்கும் நன்மதிப்புக்கும் உரியவராக விளங்கும் அன்பர் இராமராசன் அவர்களின் ஆக்கம் இந்த 'மேகநாதம்.' மேகநாதனின் இறுதிக் கட்டத்து நிகழ்ச்சி ஒன்றைச் சித்திரித்துக் காட்டுவது இந்நூல். பழைய பாத்திரங்கள்; பழைய கதை; யாப்பும் பழையதே. ஆனல் புத்துயிர் பெற்றுப் பிறங்குகின்றன. அதாவது பழமணிகளை வேகடம் செய்து ஒளியூட்டி அறம் என்னும் பொற்சரட்டில் அழகுறக் கோத்து அமைத்திருக்கிறர் நூலாசிரியர். நூல் முழுவதிலும் அந்த அறச்சரடு ஊடுருவிச் செல்வதைக் கற்போர் நன்குணரக்கூடும். இனி நூலினுட் செல்வோம்.

போர்க்களம் புக்குத் தோல்வி என்னும் புதியதோர் அனுபவத்துடன் மீண்ட மேகநாதன் நேரே இராவணனை அடைந்து பலவாறு அறங்காட்டி வாதிடுகிறான். "திருந்து நல் அறத்திேனாடு சானகி கற்பும் அன்னார் (ராம-லட்சுமணர்) தலைகளைக் காத்தலானே" வெற்றி அவர்க்கே என்றெல்லாம் பன்னிப் பன்னிப் பலவாறு எடுத்துரைக்கிறான். என்னதான் எடுத்துக்காட்டியும் "மூர்க்கனும் முதலையும் கொண்டது விடார்" என்னும் முதுமொழியே உண்மையாயிற்று. தேவியை விட வொண்ணானுக்காய்ச் செருக்களத்து எதிர்ந்து ஆவியை விட இசைந்து மீள்கிறான் மேகநாதன் தன் தனிமனைக்கு.

மேகநாதனின் ஆருயிர்த்தலைவி சுலோசனையோ இங்கு பேரறச் செல்வியாகப் பிறங்குகின்றாள். மேகநாதன் போர்க் களம் புகுவதைத் தடுக்கின்றாள் அவள். சுலோசனையின் அறம் நிறை நெஞ்சின் திறமறிபவனன்றோ மேகநாதன்? எனவே,

"கயல்வெருவும் அயில்விழியாய்! கரும்கடல்சூழ் பெரும்புவியில்
உயிர்அனையார் போர்க்குஏகின் உறுதுயரம் உள்அடக்கிப்
பயில்வென்றி உறுகளனப் பராவுவதே மகளிர்க்குச்
செயிர்தீர்ந்த அறம்என்று தெரிந்தும்நீ மறந்தனையோ?"

என்பன போன்ற வினாக்களைப் பொழிந்து தள்ளியே சுலோசனையை திணரடித்துவிடலாம் என்று கருதுகிறான் மேகநாதன். அறங் கடைப்பிடித்தொழுகும் சுலோசனையை அந்த அறம் என்ற சொல் தளரச்செய்யாமல் கிளரச்செய்து விட்டது.

"குன்றுஅனையாய்! அறம்வேட்டுக் கொடும் சமரத்து ஏகுவையேல்
வன்துயரம் ஒருகோடி வந்தாலும் பொறைகொள்வேன்;
ஒன்றியநல் அறம்நீத்தும், உலவாத பழிசுமந்தும்
புன்தொழிலில் புகுந்தக்கால் பொறைகொள்ள வல்லேனோ?"

என்றெல்லாம் விடையிறுத்து 'அறங்கடந்து ஆண்மையில்லை' என்பதைத் தெள்ளத் தெளிய உணர்த்துகின்ற அருமை அறிந்தின்புறற்பாலது. "வனிதையர்க்கு ஆகநல் அறத்தின் மாண்பெலாம்" என்ற கம்பன் வாக்கு அல்லது வாழ்த்து எவ்வளவு நன்றாகச் சுலோசனையார் மாட்டுப் பலித்திருக்கிறது என்று மகிழ்கிறோம்.

"வென்று மீளேன்" என்றியம்பிப் போர்க்களம் போந்த மேகநாதன் வீர சுவர்க்கம் அடைந்துவிட்டான். ஆருயிர்க் காதலனைப் பறிகொடுத்த அறச்செல்வி சுலோசனை தீப்பாய்கிறாள். அதற்கு முன் தோழிமார்களிடம் இறுதிவிடை பெற்றுக் கொள்ளும்போது அவள் வாயிலிருந்து வெளிப்படும் உரை வெறும் பிரிவுரையாக இன்றி அற உரையாகவே அமைகிறது:-

"பொற்புடையீர்! நீவிர்எல்லாம் உலகுஅனைத்தும்
ஏத்துஎடுப்பப் பொலிந்து தெய்வக்
கற்புநெறி பிறழாது வாழ்ந்திடுமின்!
அன்பர்உளம் கவர்ந்து அன்னார்க்கு
நற்பயனைத் தந்திடுமின்! இறைவடிவாம்
அன்புகொடு நடமின்! உள்ளப்
பற்பமலர் சிதையாது காத்திடுமின்!
அறத்தேவைப் பணிந்து நில்மின்!"

சங்கத்துச் சான்றோர் பாடல்கள், திருக்குறள், முத்தொள்ளாயிரம், சிந்தாமணி, சிலப்பதிகாரம், திவ்வியப்பிரபந்தம் முதலான தமிழ்ச் செல்வங்களின் கருத்துக்களும், சொற்றொடர்களும், ஆங்காங்கே ஒளிவிடக் காண்கின்றோமாயினும் எள்ளினுள் எண்ணெய் போல் நூலுள் கம்பனே நீக்கமற நிறைந்திருக்கிறான்.

நாவீறன் கம்பனுக்கே வணக்கமும் வாழ்த்தும் கூறும் ஆசிரியர் வாழி சானகி! வாழி இராகவன்! வாழி நல்லறம்! என்ற கம்பன் வாக்காலே நூலை நிறைவு செய்யும் பாங்கிலிருந்தும் ஆசிரியர்க்குக் கம்பன் மீதும் அறத்தின் மீதும் உள்ள உறுதியான பிடிப்புத் தெள்ளிதிற் புலனாகின்றது.

அன்னை கலைமகளின் அருளாலே அறங்கடைப்பிடித்தொளிரும் ஆசிரியரும், அவர் நூலும் தமிழ் மக்களின் அன்புக்குப் பாத்திரமாக இலங்க வேண்டும் என்று நானும் அன்பர் பல்லோருடன் வேண்டிக் கொள்ளுகின்றேன்.

அன்பும் பணிவுமுள்ள,

சா. கணேசன்.

10—8—56

கம்பன் கழகம்.
காரைக்குடி.

சமர்ப்பணம்.

தேங்கமழ் துளபத் தாரினுற் கன்பன்;
　　திருந்துபன் மொழியுணர் புலவன்;
ஓங்குநற் குணங்கட் கிருப்பிட மானேன்;
　　உண்மையே பயின்றநா வுடையோன்;
ஈங்கெமை யன்பாம் மழையினில் நனைத்தோன்;
　　எங்குலத் தொளிர்விளக் கனையோன்;
வேங்கட ராசன் திருவடி மலரில்
　　மிகுமணம் பெறுகஇந் நூலே

முதற்றெய்வம்.

கரணங்க ளோய்ந்து நெஞ்சங்
கலங்கிமெய் விதிர் விதிர்ப்ப
மரணந்தா னுற்ற போது
மம்மர்கூர்ந் தெம்மை நோக்கி
யரணில ரிவர்க ளென்றே
யாவலித் தழுது மாயன்
சரண்புகு பாப்பம்மாள் எம்
தாயன்பை நினைவன் நாளும்.

ஓம்

கம்பன் புகழ்பாடிக்

கன்னித் தமிழ் வளர்ப்போம்.

மேகநாதம்.

பாயிரம்

மாறன்

திலக வாணுதல் தெய்வச் சுலோசனைத்
தலைவ னன்புச் சரிதையை வெண்டிரை
உலவு வேலை யொளிர்புவிக் கோதிடக்
குலவு மாறன் குரைகழல் காப்பதே. 1

சிறிய திருவடி

செம்பொருட் டுணிபறிந்து செகமெலா முய்யும் வண்ணம்
கம்பநாட் டெந்தை தந்த காவிய மலர்ப்பூங் காவில்
எம்பெரு மாட்டி தன்னோ டமர்ந்திடும் எம்மான் பாத
அம்புய மலரில் வண்டாம் அனுமனை வணங்கி வாழ்வாம். 2

கலைமகள்

சீரிய படிக மாலை செவ்வியிற் குன்று வீணை
நேரிய நன்னூல் ஏந்து நிமலையை யமலை தன்னைக்
காரியற் குழற்கா டன்பிற் கனிந்தொளிர் நகை கயற்கண்
ஏரியற் றவள மேனி யிறைவியைப் பரவல் செய்வாம். 3

கம்பநாட்டாழ்வார்

எந்தையாய்த் தெய்வமாய் யாவு மாகிஎன்
சிந்தையிற் புகுந்தெனைத் திருத்தி யாண்டருள்
அந்தணர் தலைவனை யறத்தின் செல்வனை
மந்திரக் கம்பனை வழுத்து வாமரோ. 4

அவையடக்கம்

செறிவுசால் அவையின் மேய சிந்தனைச் செல்வரே! நல்
அறிஞரே! வணக்கம்! நீவிர் அமைந்த இக் காவியத்தை
நெறியினுல் நோக்கி யுள்ள நேர்மையாற் றாக்கிக் கல்லாச்
சிறியனேன் புலமை தன்னைச் செப்பஞ்செய் தருள்வீர்! நன்றே!

ஆக்கியோன்

செழுங்கவி யுலகில் வீறு திகழ்தரச் செங்கோ லோச்சி
எழுங்கவி வேந்தர் யாரும் எழின்முடி தாழ்த்தி றைஞ்சித்
தொழும் புகழ்க் கம்பனுக்கோர் தொண்டனும் இராமராசன்
வழங்குசீர் மேக நாதம் இயற்றினன்; மகிழ்வு கூர்ந்தே. 6

ஓம்
கம்பன் வாழ்க.

மேகநாதம்.

1. மீட்சியிலம்பகம்.

இறை வணக்கம்

சீரிய கற்பினுக் கோர் தெய்வத வுறையு ளாகப்
பேரிய லுலகில் தோன்றிப் பிறர்துயர் முற்றும் போக்கப்
போரிய லிலங்கை யின்கண் பொலிசிறைக் கூடத் துற்ற
ஆரியை விழியில் நீங்கா அழகனைத் தொழுது வாழ்வாம். 1

இராவணன்

அலங்கல்தாழ் குடை நிழற்றும் ஆதனத் தமுதச் சொல்லார்
பொலங்கிளர் கவரி வீசப் புலவர்கள் போற்றி செய்ய
விலங்கல் பேர்த் தெட்டு வேழ வீரமும் குமைத்து நின்ற
இலங்கையர்க் கிறைவன் சிங்க ஏறென இருந்தா னம்மா! 2

விண்ணவர் புறங்கண் டென்றும் வீரமே விளைத்த வாகைக்
கண்ணியன் — * பகழிக் கூத்தன் கார்முக வுழவி னாலே
திண்ணிய வன்மை குன்றித் தேசெலாம் அழிந்து சால
நண்ணிய துயர் மீக்கூர — நலனழிந் திருந்தா னம்மா! 3

---

* பகழிக்கூத்தன் — இராமன்.

வெங்கொடும் காற்றிற் பட்ட புயலென விதன முற்ற
செங்கணான் விலங்கன் மார்பிற் றிகழ்ந்திடு மலங்கற் காடு
துங்கமார் மயன்பொற் பாவை யுளமெனத் துயர்த்த மூச்சால்
பொங்கொளி யிழந்து வாடிப் புலர்ந்தது புரண்ட தம்மா! 4

கருங்களி றுழக்கப் பேருங் கயமெனக் கலங்கி மாழ்கும்
நெருங்குபூ ணகலத் தான்றன் நிறைவிழிக் கமல மெல்லாம்
அருங்குணத் தமலன் ஏவும் அம்புபட் டாவி பட்டோர்
ஒருங்குபட் டழி களத்துச் செம்மைபெற் றொளிர்ந்த தம்மா! 5

செஞ்சிறைக் கலுழன் தாக்கத் திகைப்புற்றுச் சுருண்டு வீழும்
வெஞ்சினத் தரவ மன்னான் விலங்கல்நே ரலங்கற் றோள்கள்
அஞ்சன வண்ணத் தெந்தை யனலுமிழ் கணையே றுண்ட
எஞ்சலில் மரா மரம்போன் றெழிலிழந் திருந்த வம்மா! 6

ஓங்கிருங் குன்றம் நாண வொளிர்தரு மகலந் தன்பால்
நீங்கலா தன்பின் வைகு நிறைபுகழ் விசய மங்கை
தேங்கமழ் துளபத் தாரான் சிலைமிசை நடனம் செய்ய
வீங்கிய மகிழ்வொ டெய்த மெலிந்தது; சால அந்தோ! 7

பொருவிலா வான நாட்டுப் புரவல ரொளி மழுங்கப்
பெருகிய புகழாம் வெய்யோன் பெருந்துயில் நீத்து வந்த
கருநிறத் தமுதக் குன்றிற் கதுமென மறைத லோடும்
மருவிய வதன பற்பம் வாணகை யிழந்த அந்தோ! 8

பொருந்திய மானந் தன்னைப் புல்லிய காமம் கொள்ளத்
திருந்திய கொற்றந் தன்னைக் காகுத்தன் சிலையே கொள்ள
அருந்துயில் தன்னை நெஞ்சத் தரித்தெழு கவலை கொள்ள
வருந்தினோன் முற்றுந் தோற்ற வறிஞரி னிருந்தா னந்தோ! 9

பன்னுசீர் வேள்வி முற்றிப் படைவலங் கொண்டு கும்ப
கன்னனை வென்று நின்ற காளையைக் களத்திற் கொன்று
துன்னிய வாகை சூடித் தோன்றுவன் மைந்த னென்று
உன்னினன் உளத்தில்; மேல்வந் துறுவதை யுணர கில்லான்.

மேகநாதன் மீட்சி

நண்ணலா ஒன்றை நச்சும் நாமவே லுழவன் முன்னர்
புண்ணியன் பகழி பாயப் புலனழிந் துருகி நொந்து
வண்ணம் வேருகிச் சோரி வார்தர நனைந்து நீல
விண்ணிடை மறைந்து வந்தான்; விளங்கெழில் மேகநாதன். 11

இராவணன்

வந்தவன் தன்னைக் கையான் மார்புற அணைத்துச் "சால
நைந்தனை! யிரங்கு கின்றாய்! நலமெலா மழிந்தாய்! வீரம்
சிந்தினை! தேம்புகின்றாய்! சிறு வலி மனிசர் தம்மால்
நொந்தனை போலும்! ஆங்கு நிகழ்ந்தது நுவல்தி!" என்றான். 12

மேகநாதன்

என்றவன் றன்னை நோக்கி "எந்தையே! என்சொல் முற்றும்
குன்றிய பொருளிற் றேனும் கொடுஞ்சின மகற்றிக் கேட்டி!
இன்றுயான் தோல்வி யுற்றேனென்னினும் இளையோன் வல்வில்
தன்றிற முணர்ந்தோ ரிங்கென் மீட்சியே சயமா மென்பார்"13

நீற்று மேனியனைக் கொண்டல் நீல மேனியனைக் கண்கள்
தோற்று மேனியனை மற்றைத் தொடுகழ லமரர் தம்மை
வீற்று வீற்றாக வோட்டி வெரிநகண்டேன்; வதனம் காணேன்;
ஏற்றிய வில்லா லன்னான் எளிதிலென் புறங்கண் டானல் 14

கார்முகம் வணக்கித் தெய்வக் கடுங்கணை நாணிற் பூட்டிப்
போர்புரி போதிற் சீற்றம் பொருந்திலன் சற்று மன்னான்;
ஏர்வளர் கரும்பு வில்லி லெழின்மலர் தொடுத்துலாவு
சீர்வளர் மதனன் ஒத்தான்; செருச்செய்வான் போன்று னல்லன்.

பொற்புசால் விசய மங்கை புளகமேன் மேலு மெய்த
அற்பினெ டணையும் வீரத் தவரொடு நம்மை யெல்லாம்
விற்பெரு வீர ரென்னல் வெவ்வழற் சீயந் தன்னெ
டற்ப வானரத்தையும் சேர்த் தரியெனப் பகர்தல் போலாம்! 16

பருதிவா னவற்கும் தோலாப் பருவலி மாயை யென்னும்
இருளெலாம் அஞ்சனக் குன்றென ஒளிர் மேனியான்றன்
அருகுசார் சிறுவன் வாயி லரும்பிய முறுவ லூடு
மருவிய நிலவே போக்கின் மற்றினி யுரைப்ப தென்னே! 17

செஞ்சிலைப் புற்றி னின்று திசையெலாம் அஞ்சப் பெரும்
நஞ்சுமிழ் கணைப் பாம்பூடு நமன்குடி கொண்டான் கொல்லோ?
நுஞ்சலில் தெய்வ வேதம் சொல்மொழி தவறி னாலும்
மஞ்சன் கை மலர்ச் சரங்கள் வதைத்தலில் தவறு;அம்மா! 18

முந்துநம் தானை யூடு முழங்கழல் வேள்வி செய்தல்
புந்தியி லுணர்ந்த வும்பி புகன்றிட அறிந்தோன் தானைப்
பந்திக ளிரிய நூறிப் பலிசொரி யென்மு னெய்தி
யுந்தினன் காலால்; சிந்து பலியொடும் உளம் சிதைந்தேன்.19

பின்னழல் வேள்வி செய்தல் பிழையெனத் தெளித்து செங்கை
மன்னுவெஞ் சிலை வளைத்து வடிக்கணை துரந்தேன்; வீரன்
அன்னவை தடுத்துச் சீறும் அழற்கணை தொடுத்துக் கொற்றக்
கன்னியின் முறுவல் கண்டு காதல்நோக் கருளி நின்றான். 20

தேங்கமழ் துளபத் தாரான் திறற்படைத் தெய்வ மெய்தி
ஆங்கவன் வலங் கொளாதே யன்பொடு வலம்செய் தென்னுள்
ஓங்குவெந் துயர மென்னு முறுதழற் காட்டி னூடு
நாங்கருந் தோல்வி யென்னும் சருகினைக் குவித்த தம்மா! 21

நிரம்பிய அழகன் அன்று நிலமெலாம் சிதையும் என்று
வரம்பறு முதலோன் தெய்வப் படையினை வழங்கல் நீத்தான்;
பரம்பிய வென்றி யுற்றேன்; படர்வலிக் கடுங்கால் மோதுண்
அரம்பையங் காடு போன்றின் றவலமுற் றழிந்து நைந்தேன் 22

தந்தையே! உரைத்த மாற்றம் தகவில தெனினும் நன்கு
சிந்தனை செய்து நம்பால் திரள்பழி முற்றும் போக்கி
நந்தலில் இசைமேய நல்கும் நன்னெறி பயின்று சான்றோர்
வந்தனை கோடி," யென்றான்; வலங்கிளர் வயிரத் தோளான். 23

இராவணன்

நிரைத்தபூ ணகலத் தான்றன் நெடுமொழி கேட்ட லோடும்
வரைத்தடந் தோள்க ளோடு வானமும் குலுங்க நக்குக்
கரத்தொடு கரத்தைத் தாக்கிக் கவின்முடி துளக்கித் தேனுண்
டிரைத்துவண் டுறங்கு தாரான் இனையன கழற லுற்றான். 24

"நின்றநின் பகழி முன்னர் நிற்பதற் காற்று தோடிக்
குன்றிடை யொளித்தான் பித்தன்;குரைகடல்புகுந்தான்வஞ்சன்;
பொன்றலை விரும்பும் வானோர் புத்தமு தினையி கழ்ந்தார்;
வென்றியே கண்டாய்; நின்பால் மேவிய தெங்கள் சோர்வே. 25

சிங்கவே றனையாய்! வெம்போர் செய்திட விருப்ப மின்றேல்
பொங்கிய பகழி மாற்றிப் போர்த்தொழிற் சிரமம் போக்கி
நங்குல முலர்ந்த போதும் நவையற இருத்தி; யானே
யங்கவர் தமைப்புறங் கண்டணிகுவன் வாகை யின்றே. 26

கோளரி யனையாய்! நீயும் குலத்துறு வீரர் தாமும்
நீளரி முடிப்பி ரென்று நினைந்திது கொண்டே னல்லேன்;
தோளுறு வலியும் விண்ணோர் வென்றியைத் துடைத்த யின்ற
வாளுறு வலியும் கண்டே வன்பகை தேடிக் கொண்டேன். 27

மண்ணவர் குனிப்புக் கொள்ள மறை யவர் களிப்புக்கொள்ள
விண்ணவர் துள்ளல் கொள்ள மீள்குவன் கொல்லோ யானும்?
திண்ணிய பகழி யொன்ருற் செருக்களத் தவர்கள் வென்றி
நண்ணுரு வண்ணம் செய்து நடுக்குறத் திரிவன் காண்டி! 28

கூனுடைக் குரக்கி னேடு கொடுஞ்சிலை மனிசர் தம்மை
வானிடை யெய்த நூறி வளர்புகழ் விசய மங்கை
மீனிடை விழியி னூடு விளங்குவ தல்லாற் பின்னும்
தேனுடை யலங்கன் மார்ப! சிறுமைகொண்டிருப்பன் கொல்லோ?

மைந்த!கேள்! சனகன் பாவை வளரெழிற் களமோ? அன்றி
நந்தலில் மயனூர் பாவை நகுமெழிற் களமோ? இன்று
சுந்தரத் தாலி நீத்தல் துணிவென வுணர்தி!நீ! போய்
நிந்தையற் றிருத்தி! விண்தோய் நெடியதேர்கொணர்தி" என்ருன்

மேகநாதன்

இங்கனம் இலங்கை வேந்தன் இயம்பினன் எழுத லோடும்
அங்கவன் பாதப் போதில் அன்புற வணங்கி நின்று
"பொங்கிய புகழோய்! என்சொற் பொருளினை யுணர்ந்தா யில்லை;
நங்கினை யுலவா வண்ணம் நவிலுவ லின்னும் கேட்டி. 31

மின்னிகர் வாழ்வை நச்சி விளம்பினன் என்று நீயும்
உன்னினை போலும்; நின்ற னுயர்படை யாவும் போரில்
சின்னபின் னங்க ளாகும் திறத்தினைக் காணும் தோறும்
என்னகம் பட்ட துன்பம் எந்தையே யறிந்தி லாயோ. 32

நனவொடு கனவி லும்நின் னலங்கிளர் செல்வ மெல்லாம்
சனகியாம் தழலி னலே சாம்பராந் தன்மை கண்டென்
மனனுறு துயரைத் தந்தாய்! மனத்துநீ யுணர்கி லாமை
வினையினேன் செய்த பாப வினைவென வுணர்ந்தே னின்றே.33

கற்பனைக் கொளித்து வேதக் கட்புலக் கப்பால் நின்ற
சிற்பரன் அறம் நிறுத்தத் திருவுளத் தெண்ணிக் கையில்
பொற்சிலை தாங்கி யன்புப் போர்வைபோர்த் தருளி ஞலே
அற்புதக் கோலம் காட்டி வந்தனன் அறிதி! ஐயா! 34

ஆரண முடிவின் மேவி யழகுற நடனம் செய்யும்
நாரணன் வில்லொன் றேந்தி நடந்தனன் மண்மீ தென்றே
வாரணம் அனைய வாலி வரைநிகர் அலங்கற் றேள்கள்
காரணத் தொடு மொழிந்தும் களிப்பினுல் மறந்தாய் போலும். 35

சிறு வலி மனிசரென்று செப்புவ தெளிது; வீரர்
பெறுவலிச் சிலையி னின்று பெயர்தரு கணைகள் முன்னர்
உறுவதும், உற்ற போரி லோவுத லிலாத வென்றி
நிறுவலும், அரிது; தந்தாய்! நிற்குமோ காற்றில் தீபம்? 36

தேனகு தெரியல் தந்தாய்! திருந்துநல் லறத்தி ஞேடு
சானகி கற்பும் அன்ஞர் தலைகளைக் காத்த லானே
வானம்வந் துற்ற போதும் வையம்வந் துற்ற போதும்
மானவர் வெல்வர்; வேழக் கொடுங்குமோ மடங்க லேறே? 37

மறையெலா முணர்ந்த தந்தாய்! மயிலனுள் கண்ணீர் வாரச்
சிறையக முறுநாள் தொட்டுத் தேவர்நற் களிக்காண் கின்றூர்;
மறைவினிற் களிக்கின்றூர்; தம் வாழ்வினைக் கருது கின்றூர்;
பிறையென வளர்வர்; உற்ற பெற்றியைத் தேர்தி! ஐயா! 38

கற்பினைத் துணையாக் கொண்டு கண்கணீர் வார நாளும்
பொற்பெலாம் சாம்பி வாடிப் புலனழிந் துருகி நாதன்
அற்பெலா முன்னி யுன்னி யருந்துயர்க் கடலு ளாழும்
விற்புரு வத்தி ஞளை விட்டிடு! வீர ரேறே!'' 39

இராவணன்

என்றனன் கழற்கால் வீரன்; இவ்வுரை செவியி லெய்தக்
குன்றனான் சினமீக் கோங்கிக் "கொடுமொழி பகரற் கெம்பி
நின்றனக் குணர்த்தி னானே? நெடுமொழி பகர்ந்தாய்! ஆவி
பொன்றினும் கிளியன் னானைப் புறத்தினில் விடுவ துண்டோ? 40

சிவக்கொழுந்தொளிரும்வெள்ளிச்சிலம்பினைப்பெயர்த்தேன்இன்று
தவச்சிறு மனிசர் விற்குத் தளர்வனோ? தென்றல் தாக்க
நிவப்புறு செந்தீ மாழ்கி நிலையழிந் திடுமோ? செங்கை
குவித்துயான் வாழேன்;தோலாக் கூற்றையும் ஆடல்கொண்டேன்.

சுரும்பிளஞ் சிறைக்காற் காற்றாத் துடியிடை சூழ்ச்சி செய்யப்
பெரும்புக ழரசி ழந்து பித்தனாய்க் கானம் நண்ணி
விரும்பியான் துயரி ழைப்ப வெய்துயிர்த் துளைந்து நையும்
துரும்பினைத் தெய்வ மென்று சொல்லஎங் கறிந்தாய்! ஐயா! 42

நிற்பது தவிர்தி! போ!போ! நீங்குதி! சிலைக ளுண்டு!
வெற்பெனத் தோள்க ளுண்டு வீரவா ளுண்டு! யானே
பொற்புற வென்று வாகை புனைகுவன்! பிதற்ற வேண்டா!
அற்பனே! செல்!செல் என்னா அழன்றனன்; எழுந்தான் மன்னோ!

மேகநாதன்

நன்னர்நெஞ் சுடைய மைந்தன் நஞ்செனக் கனன்றெ ழுந்த
மன்னவன் வதனம் நோக்கி வாய்புலர்ந் திரங்கி "எந்தாய்
சொன்னவைபொறுத்தி!யான்செய்துகளெலாம்மறத்தி!என்னைப்
பின்னினைந் தயரேல்! ஊழிற் பெருவலி யுளதொன் றுண்டோ?

அண்ணலே! வென்று மீளேன்! அடைகுவன் வானம்! பின்னர்
பெண்ணர சியை விடுப்பாய்! பெற்றனன்விடை! மீண் டின்னும்
நண்ணுதல் தவிர்ந்த" தென்றான்; நடைநவில் பரித்தே ரேறிக்
கண்ணினீ ரவையோர் கொள்ளக் கடிதினில் மறைந்தா னந்தோ!

ஓம்
கம்ப நாடன்
கழல் தலை மேற்கொள்வாம்.

மேகநாதம்.

2. சுலோசனையாரிலம்பகம்.

இறை வணக்கம்

வையமெலாம் மலர்ச்சி பெற வளர்ந்த இருட் பகைதுமியச்
செய்யகதி ரிரவியெனத் திரு வழுந்தூர் தனிற் பிறந்த
ஐய னுளப் பேரரங்கி லருளாட லினிது செயும்
மெய்யன் இணை யடிசூடி வேத மெலாம் உய்ந்தனவே. 1

சுலோசனை

செழுங் கொண்டல் பெயன் மறப்பத் தெறுகதிராற் றளர்வுற்ற
கொழுங் கொடிகள் நடுவணொரு கோமளப்பூ வாடுதல் போல்
அழுங்கு பெருந் துயர் மூழ்கும் ஆயத்தார் நடுவ ணொளி
மழுங்கி யெழிற் சுலோசனையார் மாழாந்து வீற்றிருந்தார். 2

சீத மதிக் குடையாளன் திருந்துவேள் நிகர் மேக
நாதனுளத் தகலாத நங்கை யெழிற் பங்கயப் பூம்
போதகன்ற கயம் போலப் புல்லென்று நனி வாடி
வேதனை கொண் டுளங் கலங்கி வெய்துயிர்த்து வைகினளால். 3

பங்கயப்பூம் பாதத்திற் பயின்று முரன் றிடும் பேறு
பொங்கு மணிச் சிலம்பிழப்பப் பொலிவுறு நுண் ணிடைப்புறத்தில்
தங்கியெழில் பெறும் பேறு தனிக்காஞ்சி யிழப்ப — அவள்
மங்குலினுன் மறைப்புண்ணு மதிய மென இருந்தன ளால். 4

சங்கநிகர் களத்தெய்தித் தகும் எழிலைப் பெறும் பேறு
மங்கல நாண் அன்றியுறு மற்றையபூண் குலம் இழப்பச்
செங்கரத்து முரல் பேறு திரள் வளைகள் இழப்ப — அவள்
மங்குலினுன் மறைப்புண்ணு மதிய மென இருந்தன ளால் 5

அங்கிளரும் வள்ளைக்கா தடை பேறு குழை யிழப்பக்
கொங்கு நிறை குழற் காட்டிற் குளிர்பேறு மலரிழப்பப்
புங்கநுத லுறும் பேறு புனை திலகம் இழப்ப — அவள்
மங்குலினுன் மறைப்புண்ணு மதியமென இருந்தனளால். 6

இரு விழிக்கு மையெழுதாள்; எழில்வல்லி புனையாள்; சீர்
மருவுகுழம் படிக் கூட்டாள்; மலர்ப்பவள வாய் திருத்தாள்;
பொரு கடலில் விளையமுதாற் புனைந்த ஓவியம் புகையால்
திருவிழந்த தென விருந்தாள்; தெய்வதக்கற் பிது வன்றே? 7

வங்கமுறு கடலமுதில் வளர் சுவையைப் புறங் கண்டு
பொங்கு சுவை யமுதனையாள் பொருந்து துயிற் சுவைநீத்தாள்;
துங்கவயிற் சுவை நீத்தாள்; தோட்சுவைதந் துளம் பிணித்த
சிங்கமுயர் போர்ச் சுவையின் றிறமறிவான் சென்ற வன்றே. 8

பிறை பொருவு நுதல்நீவிப் பெருகுவிழிப் புனன் மாற்றி
"நிறை துயரம் ஒழிக" என நிகழ்த்து முயிர்ப் பாங்கியருக்
கறை தராள் ஒருரையும்; அகந்தளர்ந்து பெருந் துயர்கட்
குறைவிடமாய்க்கலுழ்ந்துகலுழ்ந்துயிர்த்தழிவாள்; தழலெனவே.

தோழி

வன்று யரிங் குறுவாள் முன் வந்தொருத்தி "மயிலனையாய்!
உன்துயரம் ஒழிக! எழி லுறுவேளிற் பொலி தலைவர்
பொன்றிணிந்த தேரேறிப் போந்தனர் நம் மனைக்" கென்று
நின்று ரைத்தாள் அமுத மென; நெடுந்துயரம் குடிபோக. 10

பாங்கி மொழி கேட்டெழுந்தாள்; பதுமமென முகமலர்ந்தாள்;
வீங்கியதோருவகையினால்விரைந்தெழுந்துதழீஇக்கொண்டாள்;
தூங்கு தரளப் பந்தி தொகுநிலவு புறம் வீசி
யோங்கிய பல் வாயில் கடந் துற்றனளால் மணிமுன்றில். 11

மேகநாதன் வருகை

"பாய்புரவித் தேரிழிந்து பசுங் கரும்புச் சிலையான் கொல்?
காய்தழல் கொள் வேலேந்து கடம்பன் கொல்" எனக்கண்டோர்
ஆய்தர வெங் கரிநாண அணைவானைக் கண்டு லைந்தாள்;
வேய்மருவு தோளுடையாள் விம்முற்று நின்றொழிந்தாள். 12

பொரு வரிய மேனியினிற் பொதிந்தபசும் புண் கண்டாள்;
குருதி நனைத் திடச்சிவந்து குலவியபூண் குலங் கண்டாள்;
மருவுமுக வேர் கண்டாள்; மலர்விழியில் துயர் கண்டாள்;
பெருநடையி லிடர் கண்டாள்; பிறை நுதலாள் தளர்வுற்றாள். 13

மேகநாதன்

இரங்குவாள் முன்னெய்தி யிருகையா லணைத்தெ டுத்துக்
கருங்குழற் பின்னகம் நீவிக் கயல்விழியிற் புனல்துடைத்து
"அரந்தையிவ ணுற்றதுவோ? அகங்குழைந்து சாம்புவதோ?
பரம்பியபூண் மேனி யினிற் பயில்பேறு மிழப்பதுவோ? 14

கலை யிழந்த மதியமெனக் கைபுனையா திருப்பதுவோ?
அலை யிகந்த தாமரையி லழகழிந்து நைவதுவோ?
நிலை யிழந்த நின்னிலையை நினைதோறு மென்னுள்ளம்
வலை யிகந்த மானனையாய்! வளர்துயரா லெரிவுறுமால். 15

புன்னகைகொண் டென்துயரைப் போக்கியபூங் கோமளமே!
நின்னை வெயிற் படுகொடிபோல் நிலையழியச் செய்துயரம்
என்னை? எனக் கிசைத்தி"என இயம்பினனுல் நன்மணியைப்
பின்னுமலைக் கடல் நீத்துப் பிழைத்தோரிற் றுயர் கொண்டோன்

சுலோசனை

"பெருந்தகாய்! எஞ்ஞான்றும் பிரியாது துளைந்தாடும்
கருங்கயந் தனைப்பிரிந்த கயல் நலமும் அருட் கொழுநர்
மருங்கிருக்கத் தவமியற்று மங்கையர்தம் பெருநலமும்
ஒருங்கெண்ணப்பட்டனவென் றுணர்ந்திலையோ?மறந்தனையோ?

தங்கவரை நாணமுறத் தருக்கெய்துந் தோளாய்! நீ!
செங்களத்துப் போர் வேட்டுச் சென்றநாள் தொட்டெளியேன்
இங்குபடும் பாடனைத்தும் எழிற் கதிரோற் காணுத
பங்கயங்கண் டுளைந்தாய்க்குப் பகர்ந்திடவும் வேண்டுமோ? 18

பாழியந்தோள் வானவரைப் புறங் கண்ட பண்பாள!
வூழியொரு கணமாக வுற்ற நாள் கனவாக
நாழிகை பல் லூழியா நவிலரிய மறுக்கத்தால்
ஏழைபடும் பாடனைத்தும் எரிதழல்சார் புழு வறியும். 19

விஞ்சிய நண்புடையாய்! யான் விழிமுகிழ்த்துத் துயின்றிடுங்கால்
பஞ்சணையி லமர்ந்திடுவாய்! பரிந்து நறு மலரணிவாய்!
அஞ்சலெனப் புறம் நீவி யணைத்திடுவாய்! விழிக்குங்கால்
நெஞ்சினுளே மறைந்திடுவாய்! நின்கள்ளம் தெரிந்திலனே! 20

அன்புடையாய்! உலகமெலாம் துயில்மூழ்கி யமைதியுடன்
துன்பெலாம் மறந்திருப்பத் துணையின்றி யான் வருந்த
வன்பனைசேர் தனியன்றிற் குரலேந்தி வரும் தென்றல்
என்பினையும் உயிரினையும் ஈர்வதனைத் தேர்கிலையோ? 21

மருவுதிரு மார்ப! இருள் மலிவுற்ற கங்குலெலாம்
வருவையெனத் திறந்துவந்தும் வாராய் என் றடைத்தயர்ந்தும்
திருகிய பொற் கதவத்திற் றிகழ்குடுமி யுடன் எளியேன்
பொருவரிய உயிர்தேய்ந்து புலம்புதல் காண்" என்றனளால். 22

மேகநாதன்

"கொடி பொருவு மிடைநுடங்கு கோமளப்பூங் கற்பகமே!
முடிவறு நல் அறமுணர்ந்தும் முழுவீரர் திற முணர்ந்தும்
மடிவுறுநம் செயலுணர்ந்தும் மாற்றலர்தம் இயலுணர்ந்தும்
அடியறி யாதவர் போல் நீ! யறைவதூஉம் நன்றுமோ? 23

கயல் வெருவும் அயில் விழியாய்! கருங்கடல்சூழ் பெரும்புவியில்
உயிரனையார் போர்க்கேகி னுறுதுயர முளத் தடக்கிப்
"பயில்வென்றி யுறுக!"எனப் பராவுவதே மகளிர்க்குச்
செயிர் தீர்ந்த அறம் என்று தெரிந்தும் நீ! மறந்தனையோ? 24

விரைமருவு குழன்மடவாய்! மேதினியி லெஞ்ஞான்றும்
நிரை மணிப்பூண் பெருவீரர் நெடும்போரொன் றுறிற்களித்து
வரைபொருவு தோள் விம்ம மகிழ்வுறுவர்; இலையென்னில்
கரையறுதுன் புறுவரெனக் கண்டும் நீ! மறந்தனையோ? 25

தேன்பொருந்துமென்மொழியாய்சினம்பொருந்துமயில்விழியாய்
ஊன் பொருந்து கடுங்கணையா லுளம்பொருந்து வீரர்களும்
கான்பொருந்து மதக்கரியும் கலன்பொருந்து வயப்பரியும்
வான்பொருந்து திறம்நீயு மறந்தனையோ? அறிந்திலையோ? 26

சிலைபொருவு மெனில் வானச் சிறுபிறை துன்புறு நுதலாய்!
அலையமுதம் அனையாள்நம் மகமுற்ற நாள்முதலா
மலைவறுநம் சுற்றமெலாம் மலைவுற்று நனிவாடி
நிலையழிந்த தன்மையினை நினக்கெவரு முரைத்திலரோ? 27

அன்ன நடை யெனிற்பிடிக ளருந்துயர்கொ ணடையணங்கே!
என்னையினி தீன்றுவளர்த் தியற்கலைகள் கற்பித்துப்
பன்னரிய நன்மைகளைப் பரிவினொடு செய்தந்தை
இன்னல் நிலை யுறும்போதிங் கிருப்பதூஉம் நன்ருமோ? 28

முல்லை நிகர்த் திடுமென்னின் முத்தம் நாண் கொளும் நகையாய்!
பல்லியமும் கணைக் குழுவும் பயில்கதையும் நல்வீரம்
புல்லிய வாட் படையுமவண் பொருமோதை செவியுற்றும்
மெல்லியல்போல் யான் இருந்தால் வீரரெலாம் நாணுரோ? 29

இளம் பருவத் தணங்கரசே! இவண்சோம்பி யானிருந்தால்
வளங் குலவு விண்ணவர்கள் மறைவினகை செய்யாரோ?
உளங்கலந்த துயர் போக்கி யுவந்துவிடை நல்கெ"ன்ருன்
விளங்கிழையாள் துயரறிந்து விதிக்கிரங்கு போரேறே. 30

சுலோசனை

"இந்திரனைப் புறங்கண்டோய்! எழிற்கணவர் நெறிதிறம்பின்
நந்தலிலா அறமுணர்த்தி நன்னெறியி லுய்ப்பதுவே
கந்தமுறு குழன்மடவார் கற்பென்பர் புலனுடையோர்;
இந்தவுரை நின்செவியி லேற்றருள்க! போரேறே! 31

கறைமருவு வேலேந்து காவல!கேள்! கற்புடையார்
திறமுணர்ந்தே ருதலினுற் செப்புகின்றேன்; நம்குலமாம்
நிறைபூனைக் குவியலிடை நெடும்புகழார் சனகியெனும்
பொறைதீர்ந்த விளக்கிட்டீர்; பொன்றுதற்கோ? வாழ்வதற்கோ?

அற்புடையாய்! நும்தந்தை யாரணங்கைச் சிறையிடுங்கால்
வெற்பெடுத்துக் களிற்றடக்கல் மிகுவலியன் றயல்மகளிர்
பொற்பினைக்கண் டெழுமு ளத்தைப் புந்தியெனுந் தோட்டியினுல்
வற்பினுடன் அடக்குவதே வலியென்பா ரிங்கிலையோ? 33

மற்புயத்தாய்! நும்தந்தை மலர்க்குழலைச் சிறையிடுங்கால்
கற்புடையா ருளம் வானிற் கதிரவறகண் டுடைந்தோடும்
வெற்பினைப்போ லெளிதென்று விழையற்க! என அறத்தின்
பொற்பதனை யஞ்சாது புகன்றிடுவா ரிங்கிலையோ? 34

பொற்புடையாய்! நும் தந்தை புனையிழையைச் சிறையிடுங்கால்
கற்புடையார் விழிமலரோ? கனற்பிழம்பு! குழன்முகிலோ?
வற்பகலாக் கொடும்பாசம்! மலர்மேனி யிளங்கொடியோ?
நற்புயல்கால் மின்னல்! என நவின்றிடுவா ரிங்கிலையோ? 35

சீர்க்குரியாய்! மகளிருளச் செம்மையினை யுணராமல்
போர்க்குணத்தாற் கற்பழிக்கப் புகுதீய பாதகர்கள்
கார்க்கடல்போற் படைக் கடல்கள் கணக்கின்றிப் பெற்ருலும்
பார்க்குளவர் வென்றியினைப் பார்ப்பதூஉம் நிகழ்வுறுமோ? 36

குன்றனையாய்! அறம் வேட்டுக் கொடுஞ்சமரத் தேகுவையேல்
வன்றுயரம் ஒருகோடி வந்தாலும் பொறை கொள்வன்;
ஒன்றியநல் லறம்நீத்தும் உலவாத பழிசுமந்தும்
புன்ருெழிலிற் புகுந்தக்காற் பொறைகொள்ள வல்லேனே? 37

ஆரிய! கேள்! மலர்க்கரத்தி லடற்சிலைகள் கொண்டாரைப்
போரினிடைப் புறங்காண்டல் பொருந்தாது கனவினிலும்;
சீரிய ஓவியப் பருதி செவ்வொளியைத் தந்திடுமோ?
காரிருளைச் சீத்திடுமோ? கதிர்விரித்துப் பகல்தருமோ? 38

பொற்புடையாய்! கனவிடைநின் பொலி மார்புக் கேற்குமென
அற்பிளெடு புனைமாலை யழகழிந்து நலம் கெடவும்
கற்பகம் மூன்றினி லிரண்டு கரிந்திடவும் மின்னலொடு
நிற்புறுகா ரொன்றனுக்கு நிழல்செயவும் கண்டேனல். 39

விந்தமெனப் பொலி தோளாய்! மேவியஎன் னிலைக்கிரங்கி
எந்தை விழி நீர்சொரிய வினைந்தினைந்து நைவதூஉம்
சந்தமுறு நகர்த்தோகை சாம்பிவெளிப் போயதூஉம்
முந்துறக்கண் டுறுதுயரில் மூழ்கினேன்; எழுந்திலனால். 40

திக்கயம் வென்றுல கடக்கித் திகழ்வீரக் களிற்றரசே!
இக்கனவால் நின்மேனிக் கென்னுறுமோ எனவுளைந்து
நெக்கழியும் எனைவிடுத்துப் புறம்போகேல்; நின்செய்கை
தக்கதல'' என்றழுதாள் தருமத்தி னுயிரனையாள். 41

மேகநாதன்

அழுவாள் முகம்நோக்கி யருள்சுரந்த நெஞ்சினனாய்
''வழுவாக் குலக்கொம்பே! மாழ்குவதால் யாதுபயன்?
எழுவா யுறும்விதியை யிடைமாற்ற வல்லவரார்?
ஒழிவாய் துயர முணர்வுடையார்க் கீதழகோ?" 42

அலங்கலுறும் குழன்மடவாய்! அறமேயோ? மறமேயோ?
உலங்கலந்த பெருந்தோளாற் குறுசமர்செய் துலப்பல் யான்;
கலங்கினர்க்குப் பலமரணம்; கலங்காதார்க் கொருமரணம்;
இலங்குற யான் ஈதுணர்ந்தேன்; இறப்பதனுக் கஞ்சுகிலேன், 43

துன்றுமென துளமலரில் துளங்காது வீற்றிருந்து
நன்றுபுரி நாயகமே! நரரிருவர் புறங்கண்டு
வென்றிடின் நீ! வரவேற்ப விரைந்துறுவேன்; இலையென்னில்
மின்றிகழும் வானத்தில் விரும்பியுனை வரவேற்பேன்'' 44

என்றியம்பி மார்பூ டிறுக வணைத்திரங்கிக்
குன்றனைய நெஞ்சுங் குழைந்துவிழி நீர்மறைத்து
நின்றிரங்கி நில்லென் றிவர்ந்தான்; நெடுந்தேரில்;
துன்றுகுழல் வீழ்ந்ததுவும் சோர்விழியில் நோக்கிலனால். 45

ஓம்
கம்பனைப் பணிவோம்
செந்தமிழ் வளர்ப்போம்

மேகநாதம்

3. அற்புத இலம்பகம்

இறை வணக்கம்

சிற்பர வியல்தேர்ந் தருட்பெருங் கம்பன்
செகமெலாம் உய்ந்திட வளர்த்த
கற்பக நிழற்கண் சானகி குழலிற்
கடிமலர் புனைந்தெழிற் குன்று
அற்புத விளக்கே! கடலினிற் பிறவா
வமிழ்தமே! யாழினிற் பூவாப்
பொற்புசா லிசையே! எனக்களி கூரும்
புனிதனைத் தொழுதெழென் மனமே! 1

சுலோசனை

செறிதவச் செல்வி மலரணைப் புறத்திற்
செவ்விய வுணர்வுயிர்ப் பற்றுப்
பொறியழி பாவை யெனக்கிடந் தனள்;வெம்
போர்மதன் ஆரஞ ருற்றான்;
நறியபூங் குழலார் மாழ்கினர்; கிளியும்
நாகிளம் பூவையும் அழுத;
வறியவாம் உலகென் றறத்தொடு கற்பு
வாய்திறந் தறற்றின; அம்மா! 2

ஆர்வமோ டொருத்தி யமுதனை யாளை
யங்கையான் மார்புற வணைத்துக்
கார்முகம் பொருவு நுதற்புறத் தரும்பிக்
கவின்பெறு முத்தவேர் வகற்றிச்
சீர்தரு நன்னீர் தெளித்துமுன் தானைச்
சிவிறியைப் பைப்பய வசைப்ப
நீர்பொதி விழியை மெல்லெனத் திறந்து
"நீதியோ வேகுதல்" என்றாள். 3

சுலோசனை — தோழி

பொங்கெழிற் குரிசில் எதிரிலா மையினுற்
பொருக்கெனப் பாங்கியை நோக்கி
"எங்கெனை யாண்ட நாயகன் சென்றுன்
இயம்புதி! இயம்புதி!" யென்னுப்
பங்கய விழிநீர் பெருக்கினள்; அன்னுள்
பரிவொடு கண்ணநீர் மாற்றி
"நங்கை!கேள்! விசய மங்கைவேட் டழைப்ப
நயந்தனன் போர்க்களம்" என்ருள். 4

சுலோசனை

மஞ்சுநேர் கூந்தற் சானகி நெஞ்சம்
வருந்துறச் சிறையினி லிட்டு
வெஞ்செயல் புரியும் இராவணன் தன்னை
வெறுத்தநல் விசயமா மங்கை
அஞ்சன வண்ணன் மார்பினைப் புல்லி
யகங்களி துளும்பினள்; மீளப்
பஞ்சடி சிவப்ப வருவளோ? காயைப்
பறிப்பரோ? நறுங்கனி பெற்ருேர். 5

வெள்ளிமா மலையை யெடுத்தவன் சனகி
மென்புயம் வேட்டகா லத்தே
தெள்ளுசீர் சான்ற மயன்மக ளூடிச்
சிவக்குமுன் விசயமா மங்கை
பொள்ளெனக் கறுத்துத் திருமக ளுடனே
புலமகள் பின்வரச் சென்று
வள்ளலை யடைந்தாள்; மீள்வளோ? அமுதுண்
வாழ்வினர் நஞ்சுவேட் பாரோ? 6

திருந்தற வடிவாம் செம்மலை விடுத்துச்
சீரிய கற்பினுக் கரசி
வருந்துற நின்ற நம்மையோ நயப்பள்
வளர்புகழ் விசயமா மங்கை?
விருந்துற மலர்ந்து நறுமண மெய்தி
விளங்கு பொன் மலரினை விடுத்துச்
சுரும்பினம் தளிரை விரும்புமோ? என்னுத்
துயர்க்கனல் சுடச்சுடத் துடித்தாள். 7

நலங்கிளர் மிதிலைச் செல்விபே ரழகாம்
நவையறு நறுநெய்யா லந்தோ!
இலங்கைமன் வளர்த்த காமவெந் தழலில்
இசைவளர் குமரர்தம் உயிரும்
அலங்கலங் குழலார் களத்துறு நாணும்
அமரர்கா லுறுபெருந் தளையும்
வலங்கொடு விதியிட் டும்பர்தம் ஆக்கம்
வளர்ப்பதோ? எனத்தளர்ந் துளைந்தாள். 8

பொருப்பினை யெடுத்துப் பாரெலாம் வென்ற
புயத்தினன் உளத்தினிற் காமன்
அருப்புமென் கணையை யுய்த்தவஞ் ஞான்றே
யழல்விழிக் கூற்றுவன் கையில்
விருப்பொடு பாசம் எடுத்தனன்; இலங்கை
வீழ்ந்திடப் பிணித்தனன்; ஊரும்
கருப்புவன் பகட்டிற் கிரையென நிருதக்
கரும்பினை நல்கினன்; அந்தோ! 9

வங்கமார் கடல்சூழ் புவியினிற் கற்பை
மாண்புறக் காத்திடற் குரிய
செங்கணன் உலவாக் கற்பினுக் கரசாம்
சேயிழைக் காரிடர் செய்யும்
வெங்கொலை யரக்கர்க் குவப்புட னுதவு
வெம்மையை நினைதொறும் நெஞ்சிற்
பொங்குவெந் துயரக் கனலையெவ் வாறு
பொறுத்துயான் வாழ்குவன்; அந்தோ! 10

நீடுறு புகழாம் அரம்பையைச் சாய்த்து
நிலவிய காமவன் காற்று
பீடுறும் இலங்கைக் கோரணி கலனாய்ப்
பிறங்கிய கொற்றமாம் விளக்கைப்
பாடுற வவிப்பப் பேரிருள் யாண்டும்
படர்வதால் அரக்கர்தாழ் வுறுதல்
கோடுறும் உளத்தார் அறிந்தில ரென்னாக்
குளித்தனள்; கொடுந்துயர்க் கனலில். 11

வம்புறு குழலீர்! என்னெனக் குறுமோ?
வளர்துயர் குறைவழி காணேன்;
நம்பியின் வதனம் காண்பனோ? இன்ப
நலமெலா மீண்டுமெய் திடுமோ?
இம்பரென் காதல் தளிர்க்குமோ? வானத்
தெய்துமோ? அறிகிலேன்; என்று
அம்புய விழிநீர் பெருகநைந் தழிந்தாள்;
யாரவள் துயரளந் தறிவார். 12

தோழி

இங்கனம் இறைவி பற்பல பன்னி
யழுங்கலும் இன்னுயிர்ப் பாங்கி
செங்கையா லணைத்துக் "கோமகன் தெய்வத்
திறலை நீ! யறிந்திலை போலும்?
நங்கையோர் பாகத் தண்ணல்கை யயிலும்
நாரணன் திகிரியும் வலாரி
துங்கவச் சிரமும் ஒளிமழுங் கின;நம்
தோன்றல்தன் புகழ்க்கதிர் முன்னர். 13

புற்றரா மதியை விழுங்கிடின் வெள்ளிப்
பொருப்பினைத் தென்றலுற் றசைப்பின்
பற்றிய கனலைச் சிதரரித் தொழிப்பிற்
படரிருள் பருதியை எதிர்ப்பின்
நற்றமிழ் மொழியாய்! வீரவேந் தளித்த
நம்பியை மானுடர் வெல்வர்;
கற்றநிற் கழகோ துயருறல்? என்றுக்
கழறினள் கடுந்துய ரறியாள். 14

சுலோசனை

திருவளர் முகத்தாய்! கொழுந்துவிட் டெரியும்
செறிதுயர்க் கனலிடை வீழ்ந்தேன்;
வரும்வழி காணு தலமரு கின்றேன்
வாழ்வினுக் கிறுதியெய் தியதோ?
கருணையில் காலன் இன்பமோ வியத்தைக்
காலினற் சிதைத்தனன்; என்பால்
மருவிய மகிழ்வு வெந்தது; சாம்பர்
வடிவினும் கண்டிலேன்; அந்தோ! 15

காந்திடு முடலம்; வாய்நனி புலரும்;
கண்களு மிருளும்; நல் அறிவும்
ஓய்ந்திடும்; நெஞ்சம் வேகும்;எப் புறனும்
உருததீ நிமித்தங்க ளுறுமால்;
நாந்தக வுழவற் குற்றதோ வூறு?
நங்கையே! அறிந்திலேன்; என்று
ஏந்திழை நெருப்பைத் தின்றுதின் றுமிழ்வோர்
எய்திய இடரெலாம் பட்டாள். 16

கரம் வீழ்ந்தது

நங்கையர் தேற்று மாறறி யாது
நயனங்கள் பனித்திட நின்றார்;
செங்கயற் கண்ணாள் கனலிடைப் பட்ட
சிறுபுழு வெனத்துடித் தயர்ந்தாள்;
இங்கனம் இருப்ப — வமர்க்களந் தன்னில்
இலக்குவன் கொடுங்கணை துணித்த
வெங்கரம் குருதி பொழிந்தவள் முன்பு
வீழ்ந்தது; சேடியர் நடுங்க. 17

சுலோசனை

நறுமலர் அணிந்தும் காதலொ டணைத்தும்
நலங்கிளர் தொய்யிலை வரைந்தும்
குறுநுதற் றிலதம் எழுதியும் அன்புக்
கொடியினை வளனுற வளர்த்தும்
உறுமகிழ் வெய்து பங்கயச் செங்கை
யுதய சூரியன் கரம் ஒப்ப
வெறுநிலத் திற்றுக் கிடப்பது கண்டாள்;
வெந்துயர் நுகர்ந்திடப் பிறந்தாள். 18

கருமுகிற் புறத்திற் றுடித்தெழு மின்னோர்
காற்றினு லற்றுவீழ்ந் தென்னத்
திருமகன் கரத்தில் வீழ்ந்தனள்; உயிர்ப்பும்
தீர்ந்தனள்; மயிலெனக் கிடந்தாள்;
மருவிய மறனும் விதியினை யிகழ்ந்து
வாய்திறந் தரற்றிய தும்பர்
உருகினர்; பகையும் நீத்தனர்; சான்றோர்
உறுதுயர்க் குளமெவர் நெகிழார்? 19

பாங்கியர் திகைத்தார்; ஐங்கணைச் செல்வன்
பாழ்த்ததென் வாழ்வெனக் கரைந்தான்;
ஓங்கெழிற் கலைகள் புகலிட மின்றி
யுயங்கின; ஓவியம் அனையாள்
பூங்குழல் சோரக் கயற்கணீர் சோரப்
புல்லிய நல்லுளம் சோரத்
தாங்குயிர் சோரத் துடிப்புட னெழுந்தாள்;
தழுவினள்; கோமகன் கரத்தை. 20

அய்யகோ! என்றாள்; தரிக்கிலேன் என்றாள்;
ஆருயிர்த் தலைவவோ! என்றாள்;
மெய்யதோ? பகைவர் வஞ்சமோ? என்றாள்;
வேறொரு துணையிலேன் என்றாள்;
வையமே! வானத் தியங்குசெஞ் சுடரே!
மண்ணவர் வறுமைகண் டுருகிப்
பெய்யுமா முகிலே! எங்கணான் எனது
பெருந்தகை பேசுக! என்றாள். 21

வெற்றிடம் இன்றி நிறைபரம் பொருளே!
மெய்ம்மையே! பொய்ம்மையி லறமே!
பற்றறு விண்ணே! செங்கதிர்த் தேவே!
பலஇடத் துழிதரு காலே!
கொற்றவன் புதல்வன் என்னுயிர்த் தலைவன்
கோதிலான் இன்னருட் புலமை
பெற்றவன் நிலைமை முற்றவும் புகன்று
பெருந்துயர் களைகஎன் றழிந்தாள். 22

நல்லுயிர் சோர்ந்தாள்; மெல்லென எழுந்தாள்;
நாதனை விடுத்திவ ணிருத்தல்
புல்லிதென் றுணர்ந்தாள்; பாங்கியை நோக்கிப்
புலமையோய்! என்னுயிர்த் துணைவன்
தொல்லுல கடைந்தென் வருகையே நோக்கித்
துடிதுடித் தலமரும்; உடனே
செல்லுதல் வேண்டும்; குளிர்மலர் பொருவு
தீவழி யமைத்திடு கென்றாள். 23

தோழி

கற்பினுக் கரசி கூறிய தோர்ந்து
"கலங்கியெம் துணைவியே! நம்கண்
முற்படு நிகழ்ச்சி யனைத்துமெய் யென்று
முன்னுதல் தவறதாம்; பொய்யும்
பொற்புறு மெய்போல தோன்றிடும்; அதனால்
புலத்தினில் துகளற ஆய்ந்தால்
நற்பய னெய்தும்; இல்லையேல் அகலா
நாசம்வந் தெய்தினு மெய்தும். 24

புலனுணர் வுடையோய்! பகைவர்தம் வஞ்சப்
புணர்ப்பினால் நிகழ்ந்ததேல் வென்றித்
தலைமக னெய்தும்; நின்முகம் காணுத்
தளர்ச்சியால் துஞ்சும்;இச் செயலால்
நிலைபெறு நு் துன்பம் சாலவும் வளரும்;
நீ!யிதை யறிந்திலை; யுள்ளம்
உலைவுறேல்; பல்கா லாய்ந்ததன் பின்ன
ருற்றது செய்வதே நலமாம். 25

சீரிய கரத்தை "நிகழ்ந்தவை யனைத்துந்
திறம்பட எழுதுக" என்றால்
ஆரியன் கரமே யாயிடின் எழுதும்;
அயலவர் கரமெனி லெழுதா;
நேரிழாய்! வெய்ய போர்க்களத் திடையே
நிகழ்ந்தவை கேட்டறி" என்று
பாரிய லுணர்ந்த நல்லுயிர்த் தோழி
பகர்ந்தனள்; இறைவியும் ஏற்றாள். 26

சுலோசனை

நல்லுயிர்த் தோழி யறிவுரை யேற்ற
நங்கையக் கரத்தினை நோக்கி
"வல்லியம் அனைய அமரர்கோன் றனது
வன்பெருந் தோளினைப் பிணித்துத்
தொல்லிய லிலங்கைச் சிறையினில் வைத்த
சோர்விலா வீரநற் கையே!
வெல்லியல் வாய்ந்த நம்தலை வருக்கு
விளைந்ததென்? எழுதுக! என்றாள். 27

பெருந்தகை யிலாதேன் ஊடிய போது
பிறைநுதல் வருடியும், கண்கள்
அரும்புநீர் துடைத்தும், முதுகுழை வந்தும்,
அணியிழை திருத்தியு முள்ளம்
விரும்புவ புரிந்த மென்மலர்க் கையே!
மேவுமென் னுளமக லாத
கருங்கழற் குரிசிற் குற்றவை யனைத்தும்
கவினுற எழுதுக என்றாள். 28

பேரறி வுடையோர் கூறுவ கேளாப்
பேதைய ரெனஅசை வின்றிக்
கூரறி வுடையோன் செங்கரங் கிடப்பக்
கொவ்வைவாய் நனிதுடி துடித்துச்
சீரறி வுடையீர்! வெந்துயர்க கனலில்
தீய்ந்திடும் என்னிலை முற்றும்
தேரறி வில்லாக் கரத்தொடு பேசல்
செவ்விதோ? எனப்புகன் றனைந்தாள். 29

பின்னுமோ ராசை யுந்திடத் தலைவன்
பேரெழிற் கரத்தினை நோக்கி
என்னிலை யுணரா திருந்தபொற் கையே!
என்சிறு வாழ்வினிற் கற்பு
பின்னமொன் றின்றி நிலவினும் தூய்தாய்ப்
பிறங்கிய தெனினுட னெழுந்து
நன்னிதி யனையாற் குற்றவை யனைத்தும்
நலனுற எழுதுக! என்றாள். 30

கரம் எழுதுதல்

முல்லையிற் றூயாள் சினத்துயர் கொண்டு
மொழிந்தன கேட்டலும் பொற்கை
ஒல்லென எழுந்து பளிங்கமை தரையி
லூற்றசெங் குருதிதோய்த் தெழிலே
மல்குசெம் மணியை நிரல்படத் தூவி
வருதல்போல் அணியணி யாக
நல்லியல் எழுத்தால் அருகுளோர் வியப்ப
நவையுரு வணமெழு திடுமால். 31

பொற்புமிக் குடையாய்! சினத்துய ரொழிக!
புவியினிற் பெரியதுன் காதல்!
கற்பினிற் பிறழா நின்னுளம் தெய்வக்
காவிரி நதியினிற் றூய்து!
நற்புகழ் இமய வரையினிற் புனித
நலமிகப் பெற்றது! குன்று
அற்பினுக் கடாத ஆணையொன் றிட்டாய்!
அஞ்சினேன்! செய்தியைக் காண்க! 32

வஞ்சிநுண் ணிடையாய்! நினைவிடுத் தரிய
வன்சமர்க் களம்புகுந் திளையோன்;
வெஞ்சிலைக் கூற்றோ டாரமர் புரிந்தேன்;
வீரனும் வியந்தனன்; பண்டை
நஞ்சமென் றமரர் நினைந்தனர்; எனினும்
நல்லறம் சிறிதிலா மையினால்
எஞ்சலில் விண்ணு டெய்தினன்; அறத்தின்
ஏற்றமும் தெளிந்தனன் சிறிதே. 33

விழுமிய தவச்சான் றவர்புகழ்ந் தேத்து
மிதிலைமன் குலக்கொழுந் தனையாள்
பழுதிலா வுளம்நொந் திருவிழி சொரிந்த
படர்புனல் சரவடி வாகி
யெழுதரு மேனி யிளையவன் வல்வில்
எய்திவந் தென்னுயர் வென்றி
முழுவதும் சுட்ட தேழைகண் ணீரின்
மொய்ம்பெதற் குளதுகா ணுலகில். 34

ஆண்டகைக் கிளையோன் வென்றில னென:வல்
லரக்கர்கோ னியற்றிய மறமும்
நீண்டநாள் அமரர் புரிந்தநற் றவமும்
நேரிழை தெய்வதக் கற்பும்
மாண்டஎன் விதியும் ஒன்றுபட் டெனது
மாசிலா வீறினைத் துடைத்துப்
பூண்டநன் மானம் கலக்கிவென் றனகாண்!
புந்திநைந் தென்பய னந்தோ! 35

வேதநா யகன்றன் மருங்ககலாத
மெல்லியற் சீதையை யந்தோ!
தாதைமுன் பிரித்தான்; வெவ்விதி எந்தை
தருக்கெலாம் சிதைந்திட விசய
மாதினைப் பிரித்துப் பெருமிதம் பிரித்து
மாசிலா இசையினைப் பிரித்துத்
தீதிலா இன்ப வாழ்வினைப் பிரித்துத்
திண்மையும் பிரித்ததே! அந்தோ! 36

சிற்றிடைச் சனகி யுற்றனள் இலங்கை
தீமைவந் துற்றது; புகழே
பெற்றவள் கண்ணீர் சிந்தினள் தெய்வப்
பெருநக ரெரிந்தது; சால
நற்றவ முடையாள் சினத்துயர் கொண்டாள்
நாற்படைக் கடல்சித றியது;
மற்றினி யுரைத்துப் பயனிலை; யிலங்கை
மன்னவன அழிவது திண்ணம்! 37

தாதைநல் வாழ்வு வளம்பெற நினைத்தேன்;
சமர்க்கட னாற்றினேன்; வீரன்
கோதிலாச் சிலையாற் பெற்றனன் துறக்கம்;
குழைந்தெனை யன்புற வளர்த்தோன்
பேதமை நினைந்து வருந்துமென் துயரைப்
பெயர்ப்பவ ரில்லை;யெண் ணங்கள்
மோதயான் வருந்தும் நிலையெவ ரறிவார்?
முடிந்ததே! யிலங்கையின் வாழ்வு! 38

"காலமும் கணக்கும் நீத்தவன் செம்பொற்
கரத்தினில் ஆழிசங் ககற்றிக்
கோலமார் சிலையொன் றேந்தியிவ் வுலகிற்
கோதிலா நல்லறம் நாட்ட
நீலமா முகில்போல் வந்தனன்" என்று
நேயமார் வானவர் தம்முள்
சாலநெஞ் சுவந்து கூறுதல் கேட்டேன்;
தாதையீ தறிந்தில ரென்னே! 39

வாரியிற் பிறவா அமிழ்தமே! முன்யான்
மகிழ்வொடு புரிந்தநல் வினையால்
வேரியந் துளபம் கமழ்பதத் திடையே
விண்ணவர் இன்னமு மறியாப்
பேரிய வின்பம் என்தலை துய்த்துப்
பெருமிதம் கொண்டுள ததனை
நேரியோன் தன்பால் வேண்டினை பெற்று
நெடுங்களத் துடலொடும் சேர்ப்பாய். 40

பொங்கிய அங்கிக் கென்னுட லளித்துப்
புனிதவந் நெருப்பினி லிறங்கி
யிங்குநீ! வருக! தோழியர்க் கெல்லாம்
இயம்புக! என்னுய ரன்பு!
பங்கயக் கண்ணன் அடியிணை பரவிப்
பார்முதல் பூதமாய்ந் திடினும்
மங்கலில் இன்பம் கேளென எழுத
மாசிலாள் கண்டனள் முற்றும். 41

சுலோசனை

பழுதிலாள் மாதர் மதிமுகம் நோக்கிப்
பைந்தொடித் தங்கைமீர்! தலைவன்
வழுவிலா ஓலை கண்டனிர்! இனியான்
வருந்தியிங் குறைவது தகாது
விழுமியீர்! ஒருபாற் பெருக்குமி னங்கி!
வெந்துய ரகற்றுமின்! வீணே
யழுவது தவிர்மின்! தலைவனிற் கேகின்
அழுங்குதல் பொருந்துமோ? அன்றுள். 42

இலங்கிழை யுரைத்த மொழிசெவி புகுமுன்
இன்னுயிர்த் தோழிய ரெல்லாம்
கலங்கினர்; ஐயோ! விதிகொடி தென்றூர்;
கண்கணீர் சொரிதர அழுது
மலங்கினர்; அந்தோ! அவர்துயர் யாரே
வரைந்திட வல்லவர்? நினையின்
குலைந்திடும் கல்லும்; மரங்களு முருகும்;
குவலயத் தாற்றவல் லார்யார்? 43

வருந்தினோர் கண்கள் துடைத்தறி யார்போல்
மாழ்குதல் தவிர்மின்!யான் வீரன்
திருந்தடி பரவி யிறைதலை யேற்றுத்
திரும்புமுன் வேண்டுவ வியற்றி
யிருந்திடின் நலமாம்; இச்சிறு உதவி
யிறுதியில் இயற்றுமின்; என்று
அருந்ததி யனையாள் கூறினள்; மடவா
ரவ்வணம் புரிந்தன ரொருபால். 44

மங்கைய ரெரியை வளர்த்தன ரொருபால்;
மாசிலாள் தலைவனிற் கேகும்
நங்கைய ரென்ன மிகஅலங் கரித்து
நண்புசால் தோழியர் சிலரோ
டங்கையிற் றிகிரி விடுத்தொரு சிலைகொண்
டாடல்செய் கோமளக் கூத்தன்
தங்கிய தெய்வப் பாசறை நோக்கித்
தளிரடி சிவப்புற நடந்தாள். 45

ஓம்
செந்தமிழ்க் கம்பன் திருவடி வாழ்க!

மேகநாதம்

4. சுவர்க்க இலம்பகம்

இறை வணக்கம்

கருந்தடங்கட் கோசலையா ருளங்கனிந்தெம்
குலக்கதிரே! கண்ணே! விண்ணோர்
பெருந்தவமே! எனஅழைப்ப மார்பினிலைம்
படைத்தாலி பிறழ்ந்து மினனப்
பொருஞ்சதங்கை கம்பாபிரான் காவியம்போ
லிசைவிரியப் பொலிவு காட்டி
வருங்கருணைக் கோலத்தை நினைந்துபெருந்
துயர்க்குவிடை வழங்கி வாழ்வாம்! 1

இராமபிரான்

தண்ணரியவெண் மணற்புறத்திற் சேடனெனக்
கிளைபரப்பித் தழைத்து நின்ற
வண்ணமுறு புன்னை நிழ லகத்திளையோன்
மருங்கிருப்ப வானோர் ஏத்த
நுண்ணுணர்விற் றலைசிறந்தோன் போற்றிசெய
வீற்றிருந்தான்; நுனித்த வேதம்
பண்ணிய மெய் யறமனைத்தும் ஈடேற
வந்துதித்த * பகழிக் கூத்தன். 2

சீரியபூந் துளவகற்றி நறுந்தும்பை
யணிந்தொருபொற் சிலைகைக் கொண்ட
ஆரியனார் திருமேனி நிலவுமிழும்
நஞ்சாலு மலரிற் றூது
வாரிவரும் இளந்தென்றற் றீயாலும்
மிகக்கன்றி வாடி நொந்து
பேரிடரில் மூழ்கிடினும் இனியஎழில்
குன்றாது பிறங்கிற் றம்மா! 3

---

* பகழிக்கூத்தன் — இராமன்.

பொங்குபெருஞ் சினத்தரக்கர் விடுபகழி
தருபசும்புண் பொலிந்த மார்பு
பங்கயக்கா டெனத்திகழ நெடுஞ்சீரம்
தரித்துமிடை பவளச் செவ்வாய்
மங்கையர்த முளமீர்ப்பச் செய்யசடை
காபாலி மகிழ்விற் றுங்கும்
திங்களுளங் கவற்றஎழிற் களஞ்சியமாய்
எம்பெருமான் திகழ்ந்தா னம்மா! 4

கருணைநிறை மதிமுகமும் கனிவுசெயும்
துவர்வாயும் கமலக் கண்ணும்
தருணவிளம் பிறைநுதலும் சானகியார்
குழல்வகிர்ந்து தணியா அன்பால்
வருணமலர் புனைந்ததடக் கரமலரும்
என்னுளத்தே வயங்கி நீங்கா
அருணமலர்ச் சேவடியும் கடற்புறத்தில்
விருந்தாகி யமைந்த அம்மா! 5

குன்றனையா னருகிருந்த குலக்குமரன்
முகம்நோக்கிக் "கோல மைந்த!
கன்றுசினப் பேரரக்கன் ஆருயிரும்
என்றுயரும் கலங்கி நீங்க
வென்றிபுனை தனையென்றான்" நாணத்தால்
தலைகவிழ்ந்து வீரன் நின்றான்.
துன்றுகடற் பரப்பனையா ரிசைகேட்டுப்
பொங்குவரோ? சுருங்க லல்லால். 6

சுலோசனை

வேதமுதற் பெருந்தலைவ னிவ்வண்ண
மீண்டிருப்ப வீரன் தேவி
சீதமதி தருநிலவு புரைதுகிலாற்
றிருமேனி செவ்வே போர்த்து
மாதர்சிலர் வழிகாட்டப் புன்னைமரத்
தடிவந்தாள்; வனசம் பூத்த
தீதகன்ற முகிலனையான் றனைக்கண்டாள்;
அடிபணிந்தாள்; திகைத்தார் கண்டோர். 7

வந்துபணிந் தெதிர்நின்ற கற்பரசி
முகம்நோக்கி வாய்மை மிக்கான்
நந்துபெருந் தகவுடையீர்! யாவிர்நீர்!
வந்ததெவன்? நவில்மின் என்றான்.
கந்தமுறுங் குழன்மடவா ளிறைநிமிர்ந்து
தெய்வவுருக் கரந்தெம் போல
வந்தருளும் பெருநிதியே! சமயமெலாம்
கடந்தொளிரும் வண்மைத் தேவே! 8

இந்திரனைப் புறங்கண்ட பெருந்தலைவற்
குரியேன்யான் இறைவ! நின்பால்
அந்தமிலான் மணிமுடியும் ஆரருளும்
பெறவேண்டி யடைந்தேன்; என்றும்
வந்திரந்தோர் நினைந்தவெலாம் வரையாது
தந்தகுலம் வாழ வந்த
அந்தண! நல்குக என்றாள் பெண்மைதனக்
குயிரளிக்கும் அமுத மன்னாள். 9

மங்கைமொழி கேட்டருளிப் பெருங்கருணைத்
தனிக்குரிசில் "மருத்தின் மைந்த!
பங்கமிலான் முடிகொணர்க" என்றுரைத்தான்;
அன்னவனும் பரிவி னேகிச்
செங்காத்திற் கொடுவந்தான்; உயிர்துறந்துந்
துறவாது திகழும் வீரம்
தங்குமுக மதிகண்டார்; வியப்புற்றார்;
கருங்குழலாள் தளர்ந்து சாய்ந்தாள். 10

இலக்குவன்

மின்னனையாள் வந்தபொழு தேதுயர
நீர்சொரிந்து வெந்து நொந்திக்
கன்னியின்வாழ் வழித்தேன்;என் றகந்தளர்ந்த
இளவில்லி கலங்கி வீழ்ந்த
நன்னுதலாள் துயர்கண்டான் 'என்மகளே!
இத்துயரம் நானே தந்தேன்;
என்னினிவண் யார்கொடியர்?" எனவரற்றி
மிகத்தளர்ந்தான் இன்னல் கூர்ந்தே. 11

வில்லியவ ணிருந்தோரை முகம்நோக்கி
"யன்புடையீர்! வீரம் பேணி
நல்லியல்புக் குறைவிடமாம் என்புதல்வி
வாழ்வனைத்தும் நானே சுட்டேன்;
புல்லியர்யார் எனைப்போல்வார்" என்றழுதான்
இதற்கேது புலப்ப டாமல்
எல்லிமகன் முதலானோர் திகைத்தயர்ந்தார்;
அருட்குரிசி லியம்ப லுற்றான். 12

இராமன்

பேராத நண்புடையீர்! அரவரசன்
புதல்வியிவள்; பெருமி தங்கண்
டாராத காதலுடன் அரக்கர்கோன்
தனைமணந்தாள் அன்பின் மிக்காள்.
சீராரும் அரவரசே யென்பின்னர்
அவதரித்தென் சிறுமை போக்கி
நேராரும் இலாமகனைக் கண்டுதுயர்
மீக்கூர நெடிது நைந்தான். 13

என்றியம்பி யுலகுடையான் இளையவனை
மருங்கிருத்தி "எந்தாய்! வேதம்
நன்றுணர்ந்தாய்! உலகவியல் பிற்றென்னும்
திறமறிவாய்! ஞாலம் தன்னுள்
பொன்றுவன வெற்றுடலே! அரியவுயி
ரழியாது! பொலியும் என்றும்;
நின்றவுயிர் அழியுமென வருந்துவர்கொல்?
பேரறிவின் நிலைய மன்னர். 14

வருந்துவது தவிர்தி!யிவள் துயரனைத்தும்
சிலநொடியில் மாறும்; வெய்ய
பெருந்துயரும் இன்புருவாம்; அங்கியெனும்
திரைவிலக்கிப் பெருவிண் ணாட்டில்
இருந்ததனிக் காதலனை யெய்திடுவாள்;
விடைதருக" என்று தேற்றக்
கருங்கழலான் உளந்தேறி நெட்டுயிர்த்தான்;
பெருங்குன்றும் கரைந்த தம்மா! 15

அண்ணலெழிற் சிரம்நோக்கி மயக்குற்றேருள்
தெளிவெய்தி யந்தோ! வந்தோ!
கண்ணிணைகள் காண்பனவும் மெய்ம்மையோ?
என்னுள்ளம் கல்லா யிற்றே?
புண்ணியனுக் கிதுதகுமோ? தெய்வமே!
கொடியையெனப் புரளும் போதில்
பெண்ணரசி முகம்நோக்கி யன்புடையோன்
முகம்இன்ன பேசிற் றம்மா! 16

தலைபேசுகிறது

பிறைநுதலாய்! அயர்ச்சியுறேல்! இளையவனெற்
குயர்வாழ்வு பேணித் தந்தான்;
குறைவகன்றேன்; நிகழ்ந்தவெலாம் நல்லனவே;
இலங்கையர்கோன் கோதில் வீரன்
மறைபொருவு வெஞ்சிலையால் துறக்கமுறும்;
அவன்வாழ்வும் மாண்பே எய்தும்;
சிறைபுகுந்த விண்ணவரும் துயர்தீர்வர்;
நின்வாழ்வும் சிறக்கும் அஞ்சேல். 17

காதலிக்கிவ் வணமுரைத்துக் கோசலநாட்
டெம்மானைக் கனிந்து நோக்கி
''வேதமெலாம் தடுமாற முனிவரெலாம்
ஆய்ந்தலுப்ப வில்லொன் றேந்திப்
பூதலத்து மறைந்துவளர் பெருங்கருணைத்
தனிமுகிலே! புல்லி யோம்செய்
தீதனைத்து மறந்துகடைக் கண்ணேக்கம்
அருள்க''வெனச் செப்பிற் றம்மா! 18

இராமன்

சென்னிமொழிந் ததுகேட்டுப் பேரவையோர்
வியப்பெய்தச் செங்கண் மூர்த்தி
''பின்னமிலா நற்புகழும் குன்ருத
தனிவாழ்வும் பெற்று விண்ணேர்
நன்னகரத் துயரின்ப மெய்துக''என்
றன்பிெனடு நவின்ருன்; தெய்வக்
கன்னியவ னடிபோற்றி விடைகொண்டாள்;
தலையெடுத்தாள் கடிது மீண்டாள். 19

சுலோசனை

ஆண்டகைதன் மேனியினைப் பெறவேண்டிப்
போர்க்களத்தை யடைந்தாள்; ஆங்கு
மாண்டவர்த முடற்குன்றந் தனைக்கண்டு
நொந்தழுதாள்; மடவோன் காமம்
பூண்டதனுல் விளைந்தவினை விதுவென்ருள்;
இலங்கைவளம் போயிற் றென்ருள்;
தீண்டரிய கற்புடையாட் கிடரிழைத்தோன்
பெருவாழ்வு தேயும் என்ருள் 20

தந்தையரை யிழந்தவரும் தாயர்தமை
யிழந்தவரும் தகவு மிக்க
மைந்தர்தமை யிழந்தவரும் கிளைஞர்தமை
யிழந்தவரும் மறுக்க முற்றுச்
சிந்துவிழிப புனலாற்றுப் பெருக்கினிலும்
இலங்கையர்கோன் தீய காம
வெந்தழல்தான் அவியாமல் மேன்மேலும்
பெருகிவளர் விந்தை யென்னே 21

இலங்கையர்கோன் மிகக்கொடியன் எனப்புலம்பி
நாயகனை யெங்கும் தேடிக்
கலங்கிடும்போ தொருவீர னெதிரெய்தி
யடிவணங்கிக் கலங்கிப் "பாகன்
நலங்கிளர்நம் ஆண்டகையின் மேனியினைத்
தேரேற்றி நகரங் கண்டு
புலம்படைய அரண்மனைக்குக் கொடுசென்ருன்"
என்றுரைத்தான் பொருமி நைந்தே. 22

கற்புடையா ளிம்மொழிகேட் டுளங்குலைந்து
வீரரெலாம் கரம் குவிப்ப
முற்படுபோர்க் களத்தினிலோர் தேரேறிப்
போந்தநிலை முற்றும் மாறி
அற்புடையோர் கண்கலுழத் தேரேற்று
நிலைவந்த தந்தோ! என்ரு
வெற்பனைத்தும் உருகவழு தன்புறு
தோழிய ரோடுமீண்டா ளந்தோ! 23

நகரமக்கள்

பங்கயச்செம் பதஞ்சிவப்பப் பெருந்தகைதன்
சிரமேந்திப் பரிந்து மீளும்
மங்கையைக் கண்டவருற்ற துயரமெலாம்
எடுத்துரைக்க வல்லார் யாரே?
தங்கரத்தால் முகம்புடைப்பர்; விழிபெயர்ப்பர்;
அலமுறுவர்; தளர்வர்; சாய்வர்;
சங்கையிலே பலரிறந்தார்; இலங்கைநகர்க்
குயிரன்றே தடங்கண் மாதே. 24

"வேதநெறி தவறாத கற்புடையாள்"
என்பர்சிலர்; "மெலியோர் தம்பால்
ஆதரவின் னவள்போலக் கொண்டவர்யார்?"
என்பர்சிலர் "அனைவ ருக்கும்
பேதமிலா அன்னையென விளங்கினாள்"
என்பர்சிலர் "பெரியோர் வாழ்வில்
வேதனைவந் துறுவதோ" என்பர்சிலர்;
இலங்கையினி மீளா தென்பர். 25

இலங்கைநகர்ப் பெருவாழ்வு தொலைந்ததென்பார்;
மீட்சியினி யில்லை என்பார்;
துலங்குமொரு பெருஞ்செல்வம் அழிந்ததென்பார்;
மீண்டுமது தோன்றா தென்பார்;
நலங்குலவு மின்னிசையா முடைந்ததென்பார்;
அதுமீள நகுமோ என்பார்;
பொலங்கிளரு நறுமாலை கரிந்ததென்பார்;
மறுத்துமது பொலியா தென்பார். 26

சுலோசனை

இன்னணம்கண் டவர்கூறித் துன்பமுறத்
தன்னில்லம் எய்தி நின்று
கன்னியர்தம் முகம்நோக்கி "யன்புடையீர்
நாடோறும் காத லென்றன்
புன்னகைவேட் டிவணிருப்ப னவையெல்லாம்
கனவாகிப் போயிற றம்மா!
அன்னவைமீண் டினிவருமோ? என்செய்வ
தது நினைந்தா லளிப்பார் யாரே. 27

கற்பகப்பூங் காவினிடைக் களித்திருந்த
புரந்தரனைக் கணத்தில வென்று
வெற்பனைய திண்டோளில் வாகைபுனைந்
தாவலொடு மேவி யென்னை
யற்புமிகத் தழுவியுய ராரமுதே!
நின்காதல் அளித்த திந்தப்
பொற்புறுநல் வென்றியென வாகையெனக்
கணிந்ததுமிப் புறத்தி லந்தோ! 28

என்னுயிரிற் பிரியாமல் எஞ்ஞான்று
முறைதலைவ னிணையில் விண்ணோர்
துன்னுவலிப் பேரசுரர் இயக்கர்முதற்
பல்குழுக்கள் தொலைய வென்று
கன்னவில்திண் டோட்புறத்துச் சூடிவரு
வாகையந்தார் காதல் கூர
என்னையணைத் திடவுதிர்க்கும் பொற்றுது
நிரம்பியது மீண்டே யந்தோ! 29

பண்டுநிகழ்ந் தனவனைத்து முன்தோன்றப்
பெருந்துயராற் பதை பதைத்துக்
கெண்டைநிகர் தடங்கண்ணாள் பாங்கியர்கள்
புடைசூழக் கேண்மை மிக்கான்
கண்டுவக்கும் படைச்சாலை யிசைச்சாலை
நாடகங்கள் காணும் சாலை
மண்டுமெழிற் கலைச்சாலை யாதியன
நோக்கிமிகு மம்மர் கூர்ந்தாள். 30

குன்றுறத விறற்சிங்க மணிந்ததனிப்
பெருங்கவசம் கோலச் செவ்வாள்
பொன்றுறத தனிக்கிடுகு தொலையாத
பெருந்தூணி பொலிவார் வில்வேல்
ஒன்றுதார் வாழ்வழிக்கும் தனித்தகதை
"எங்கேயெம் ஒப்பி லாதான்"
என்றூர்வத் தொடும்கேட்பத் தரியாது
நெஞ்சமுங்கி யேங்கி நைந்தாள். 31

நாயகன்றன் பொருளனைத்தும் துயர்நல்க
ஆற்ருது நலிந்து வேருேர்
வாயின்வழி யேகுதலும் நாடோறும்
புகல்வதுபோல் மணிவாய்க் கிள்ளை
"நேயமுளார் காத்துள்ளார் காவினிடை
விரைந்தின்னே நீயே" கென்ன
ஆயிழையாள் பட்டதுய ரார்படுவார்?
கீழ்வீழ்ந்தா ளரற்றி நைந்தாள். 32

எள்ளரிய குணமுடையாள் பாங்கியர்தம்
முகம்நோக்கி "ஏழை யேன்றன்
தள்ளரிய பெருந்துயர மகற்றநினை ந்
தெனையாண்ட தலைவ னிந்தக்
கிள்ளைவிடுத் தனன்;எங்கு வளர்த்துளீர்
நெருப்பென்ருள்" கிளைத்த துன்பத்
துள்ளுடைந்து புறக்கடையைக் காண்பித்தார்;
அன்பிடையே உருகு மாதர். 33

மங்கையரிந் தனமடுக்கித் தழல்வளர்த்தாண்
டகைமேனி மருங்கு வைத்துப்
பொங்குதுயர் சுடவிருந்தார்; தேற்றுவா
ரில்லாத பூங்கட் கோதை
யங்கணுகிக் காதலன்றன் றிருமேனி
மிசைவீழ்ந்தாள்; அன்பன் மேனிச்
செங்குருதி யுடல்நனைப்ப வுளம்வெந்தாள்;
பலநினைந்தாள்; தேம்பி நைந்தாள். 34

குருதிவழி யுடல்கண்டு குலுங்கவழுதாள்;
சரங்கள் குடைந்த புண்கண்
டுருகியுளம் நீருனள்; ஐயகோ!
என்துயரம் ஒழியா தென்ருள்;
பெருகியஎன் தனிவாழ்வும் இவ்வண்ணம்
சீரழிந்து பெயர்ந்த தாரே
வருவிதியைத் தடுக்கவலார்? என்றழுதாள்;
துடிதுடித்தாள்; மயங்கி வீழ்ந்தாள். 35

தேற்றஎழுந் தனள்;அன்பு குறையாத
　　பாங்கியரைச் செவ்வே நோக்கிக்
கோற்றொடியீர்! விடைதருமின்! வருந்தாதீர்!
　　துயரமினிக் குறுகா தென்பால்;
ஆற்றலனெம் பெருந்தலைவன் அழைக்கின்றான்;
　　இனியிருத்த லடாது; நுங்கள்
ஏற்றமுறும் அன்பனைத்தும் காதலனுக்
　　குரைத்துவப்பேன்; எனை மறுதீர்! 36

அறவுரை

பொற்புடையீர்! நீவிரெலாம் உலகனைத்தும்
　　ஏத்தெடுப்பப் பொலிந்து தெய்வக்
கற்புநெறி பிறழாது வாழ்ந்திடுமின்!
　　அன்பருளங் கவர்ந்தன் னார்க்கு
நற்பயனைத் தந்திடுமின்! இறைவடிவாம்
　　அன்புகொடு நடமின்! உள்ளப்
பற்பமலர் சிதையாது காத்திடுமின்!
　　அறத்தேவைப் பணிந்து நின்மின்! 37

தீக்குளித்தல்

என்றியம்பிப் பாங்கியரைத் தனித்தனியே
　　தழீஇக்கொண்டாள்; இரங்கி யோர்பால்
நின்றுருகு மிளமானைத் தைவந்தாள்;
　　இனிநீவிர் நின்மின்; என்று
நன்றியம்பித் தனித்தலைவன் திருமேனி
　　யணைத்தெடுத்து நண்பு கூர்ந்து
சென்றுதழற் பெருங்காட்டி னடுநின்றாள்;
　　தாமரைவாழ் திருவே போன்றாள். 38

பஞ்சணையிற் றுயில்வதுபோற் காதலன்பொன்
　　மேனியினைப் பாங்கர் வைத்து
விஞ்சுமன்பொ டொருபுறத்து மெலவமர்ந்து
　　நாயகனை விரும்பி யேத்திக்
கஞ்சமலர்க் கரம்கூப்பித் தலைசாய்த்தாள்;
　　பெருநெருப்புக் காட்டி னூடு
வஞ்சியிடை மிகமகிழ்ந்தாள்; தழற்கடவுள்
　　மயமாக வயங்கி னாளால். 39

பற்றியசெந் நெருப்பினிடைப் பூங்கொடியே
குதல்கண்டு பதறி வீழ்ந்து
பொற்றொடியார் அவசமுற்றார்; உணர்விழந்தார்;
இளங்கிளியும் புலம்பிற் றம்மா!
கொற்றமுறு மிலங்கையர்கோ னுளம்வளர்த்த
காமவனல் கோதில் வீரன்
நற்றவப்பூம் பொழிற்கொடியைச் சுட்டெரித்த
துலகமிதை நன்கு தேர்க! 40

சுவர்க்கம் புகல்

பற்றியசெந் தழற்கடவுள் பொன்னுடலை
நீருக்கப் பரிந்து பின்னர்
பெற்றதனித் தெய்வவடி வொளிவீசக்
கற்பகமே பிறங்கு கானில்
உற்றனள்; காதலற் கண்டாள்; தழீஇக்கொண்டாள்;
"இனிப்பிரியா துறைவோம்" என்று
சொற்றனள்;கற் பகப்பூவை நாயகற்குத்
தொடுத்தணிந்தாள்; துயரம் தீர்ந்தாள். 41

விழுமியநண் புடையவர்கள் இவ்வண்ண
மீண்டிருப்ப மெய்சோர்ந் தின்னல்
தழுவியபாங் கியரெழுந்தார்; சிதையினிடை
வானோர்கள் சாலப் பெய்த
கொழுமலர்கண் டயர்வொழிந்தார்; உவகையுற்றார்;
"சுலோசனையார் கோதில் கற்பு
தொழுதகைய தென்றுரைத்தார்; இஃதறிந்த
அரக்கரெலாம் துயரம் தீர்ந்தார். 42

தளிர்த்தார்

வண்டுதமி ழிசைபாடு கற்பகப்பூங்
காவினிலும் வளஞ்சால் தெய்வப்
புண்டரிக வாவியினும் நறுஞ்சினைதாழ்
எக்கரினும் பொலியு மின்பம்
மண்டியசெய் குன்றினிலும் எழுநிலைமா
டத்தினிலும் மருவி நீங்காத்
தண்டமிழின் சுவைகண்டார்; குறையாத
காதல்மிகத் தளிர்த்தா ரம்மா! 43

காதலர்கள் மலர்சொரிந்தார்

வேதமுதற் பெருந்தலைவ னிலங்கைநகர்ப்
போர்முடித்து மெய்ம்மைத் தேவாம்
சீதையுடன் அயோத்தியினில் முடிசூடு
விழாவினிலே தெய்வ இன்பக்
காதலர்கள் மலர்சொரிந்தார்; அவையனைத்தும்
எம்பெருமான் கழலிற் சார்ந்து
தீதகன்ற; உலகமெலாம் அறவாழ்வு
பிறழாது செழித்த அம்மா! 44

கவிச்சக்ரவர்த்தி

புல்லியஎன் னுளத்தினிலும் நாவினிலும்
சிரத்தினிலும் பொலிந்து வைகி
நல்லியல்சால் கவிபாட வூக்கியெனக்
குயிரளிக்கும் நம்பன் கம்பன்
வில்லியைசெங் கரக்குரிசில் அகலாத
உளத்தினன் நாவீறன் வேதச்
சொல்லினிமை சுவைத்தறிந்தோன் நீடுழி
யிவ்வுலகிற் றுலங்கி வாழி! 45

வாழி! சானகி! வாழி! இராகவன்!

வாழி! நல்லறம்!



எதிர்பாருங்கள்!

குமாரசம்பவம்

மகாகாவியம்

கம்பராமன்

கம்ப நிலையம்

வேலூர் (சேலம்)